Registered No. M. 801

"உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

THE . . .

AGRICULTURIST

A Monthly Journal devoted to
Agriculture and its allied Subjects

கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப்பத்திரிகை

Vol. 1	சௌமிய௵ வைகாசி௴ 1௳	Part. 2
புத்தகம். 1	1909௵ மே௴ 14௳	பிரதி. 2

Contents

A suggestion to owners of Double crop wet lands ... 17
Plantain cultivation on Dry land by M.R.Ry. S. Ramalingam Pillay Avl. ... 22
Arni Exhibition ... 26
Month's operations ... 27
Banku Paddy by M.R.Ry. Rao Bahadur J. Dhurmaranga Raju Garu ... 28
News & Notes ... 30

பொருளடக்கம்

இருபூன்செய நிலங்கள்உடையவர்களுக்கு ஓர் யோசனை 17
புன்செய் நிலத்தில் வாழைப்பயிர் சாகுபடி ம-ா-ா-ஸ்ரீ எஸ் ராமலிங்கம் பிள்ளை அவர்கள் 22
ஆரணி பொருள் காக்ஷி ... 26
மாதத்திய பருவங்கள் ... 27
பாங்கு நெல் ம-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் ஜெ. தர்மரங்கராஜு 28
குறிப்புகள் 30

வருஷசந்தா தபால்கூலி உள்பட அணா 12
Annual Subscription including Postage As. 12 only

Edited and Published by
J. R. RANGARAJU,
5, Mount Road, Madras

[All Rights reserved]

கிருஷிகன்

மாதந்தோறும் பிரசுரமாகும் ஓர் விவசாயப்பத்திரிகை. ஷை பத்திரிகையானது விவசாயத்தில் அனுபோகமும் பாண்டித்யமுமுள்ளவர்களால் எழுதப்பட்டு வருகிறது. ஒவ்வொருவரும் வாங்கி வாசித்து நமது தேசத்து விவசாயம் விருத்தியடையவேண்டும் என்னும் எண்ணத்துடன் காகிதக்கிரையமும் அச்சுக்கூலியும் தபால் செலவும் மாத்திரம் கிடைக்கும்படிக்கான குறைந்த சந்தா வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா அங்கீகரிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு வருஷமும் சித்திரையீ முதல் ஆரம்பமாகிறது. கடந்த சஞ்சிகைக் கூடுமானவரையில் சப்ளை செய்யப்படும்.

சந்தா விபரம்		ரூ.	அ.	பை.
இந்தியா, பர்மா, சிலோனுக்கு மாத்திரம் தபாற்கூலி உள்பட வருஷம் ஒன்றுக்கு	... ...	0	12	0
தனிப்பிரதி	... ...	0	2	0

மற்ற அயல்தேசங்களுக்கு தபால்கூலி மாத்திரம் பிரத்தியேகம்.

விளம்பர விகிதங்கள்

பக்கம் ஒன்றுக்கு	ரூ. அ. ப.	½ பக்கத்திற்கு	ரூ. அ. ப.	கால் பக்கத்திற்கு	ரூ. அ. ப.
1 மாதத்திற்கு	5 0 0	1 மாதத்திற்கு	3 0 0	1 மாதத்திற்கு	2 0 0
6 மாதங்களுக்கு	25 0 0	6 மாதத்திற்கு	15 0 0	6 மாதத்திற்கு	10 0 0
1 வருஷத்திற்கு	40 0 0	1 வருஷத்திற்கு	24 0 0	1 வருஷத்திற்கு	16 0 0

இராஜாம்பாள்

துப்பு அறியும் தமிழ் நாவல்

20 பவுண்களடங்கிய பளபளப்பான காகிதத்தில் டெம்மி 184-பக்கங்களடங்கியது. மேலும் இதில் இங்கிலீஷ் நாவல்களைப்போல் இதுவரையிலும் இல்லாத புதுமாதிரியாக கண்டோர் மனதைக் கவரும் மூன்று சித்திர படங்கள் ஆர்ட்பேப்பர் என்னும் வளவளப்பான காகிதத்தில் அச்சடித்து கோர்க்கப்பட்டிருக்கின்றன. இதைப்போலொத்த நாவல் இதுவரையில் வெளிவந்ததில்லையென்று பத்திராசிரியர்களாலும், வாங்கி வாசித்த எல்லோராலும் புகழப்பெற்றது. நாம் கேட்காமலே இதைப் புகழ்ந்து அநேக கனவான்களும், மாது சிரோண்மணிகளும், நூற்றுக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்த நாவலை வாசிக்க ஆரம்பிவித்து விட்டால் முடிக்கும் வரை வேறு வேலைசெய்ய மனம் வராதென்றால் வேறு என்ன சொல்வது.

இந்த அபூர்வமாகிய நாவலின் விலை அணா 12. தபாற்கூலி வி. பி. கமிஷன் அணா 2. பிரத்தியேகம்.

வேண்டியவர்கள்

ரங்க ராஜு அண்டு பிரதர்ஸ்

5. மௌண்ட்ரோட், சென்னை.

என்று எழுதி வி. பி. மூலமாய் பெற்றுக்கொள்ளலாம்.

THE AGRICULTURIST

A monthly Journal devoted to agriculture and its allied subjects

கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை

Vol. 1 }
புத்தகம் 1 }

சௌமிய ௵ வைகாசி ௴ 1௳
1909 ௵ மே ௴ 14௳

{ No. 2
{ பிரதி 2

இருபூ நன்செய் நிலங்கள் உடையவர்களுக்கு ஓர் யோசனை

A SUGGESTION TO OWNERS OF DOUBLE CROP WET LANDS

திருநெல்வேலி முதலான அநேக ஜில்லாக்களிலுள்ள நன்செய் நிலங்களில் பிசானம் அருவடை மாசிமாதத்துடன் முடிந்துபோகிறது. அடுத்த கார் சாகுபடி வைகாசி ஆனிமாதங்களில் செய்யப்படும். அதுவரை மூன்று மாதங்களுக்கு நன்செய் நிலங்கள் தரிசாயிருக்கும். அந்தக்காலத்தில் அநேக கிருஷிகர் நிலத்தை உழுது காயவிடுவார்கள். இப்படிச் செய்வது எதற்காகவென்றால் நிலத்திலுள்ள பயிருணவானது காற்றும் வெயிலும்பட்டு நன்றாய்ப் பக்குவமடைந்து அடுத்துச்செய்யும் பயிரை செழிப்பிப்பதற்காகவும், வைகாசி ஆனிமாதங்களில் விதைப்புக்கேற்ற மழை பெய்தால் நெல்லைப் பொடியில் (புழுதியில்) விதைப்பதற்காகவுமே. இவ்விதமாகத் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள அநேக கிராமங்களில் நன்செய் நிலங்களை உழுது போட்டிருக்கிறார்கள். நிலங்களில் ஆனிமாதம் முதல் புரட்டாசி௴ வரை கார்ப்பயிரும், அதன்பின் ஐப்பசி௴ முதல் மாசி௴ வரை பிசானம் பயிரும் நிற்குமாதலால் அந்நிலங்களுக்கு ஓய்வு அவசியமாகும். வருஷம் முழுவதும் பயிர்களைப் போஷித்துக்கொண்டே

யிருந்தால், நிலங்கள் ஓய்ந்திருந்து பயிருணவை பக்குவப் படுத்துவதெப்போ? அப்படி ஓய்வுகாலம் விடாமல் எப்போதும் பயிரிட்டு மாசூல் எடுத்துக்கொண்டேயிருந்தால், எவ்வளவுதான் அதிகமாய் எருவிட்டாலுங்கூட நிலங்கள் வளமற்றுப் போகுமென்பதில் தடையேயில்லை. இந்தக் காரணத்துக்காகவே சாதாரணமாய் எருவிடாத புன்செய் நிலங்களை ஒருவருஷம் பயிரிட்டால் இரண்டு வருஷம் தரிசுபோட்டுக் கால்மாறிச் சாகுபடி செய்வது. ஆகையால் நிலத்துக்கு அடிக்கடி கொஞ்சம் ஓய்வு அவசியம். நில ஓய்வில் இரண்டு விதங்களுண்டு. ஒன்று வெட்டை ஓய்வு—அதாவது வாஸ்தவத்திலேயே நிலத்தை உழுது தரிசு போட்டுவைப்பது. இரண்டாவது பசுந்தாள் ஓய்வு—அதாவது நிலத்தை உழுது புழுதியில் ஏதாவது ஒரு தழைப்பயிர் விதைத்து, அது புஷ்பிக்கும் சமயத்தில் அந்தப் பசுந்தாளை நிலத்தில் உழுது விடுவது. இந்தப் பசுந்தாள் ஓய்வில், பயிர் வளர்ந்து நிலத்தை முற்றிலும் மூடும்வரையும் காற்றும் வெயிலும் மண்ணில் புகுந்து பயிருணவைப் பக்குவப்படுத்தும். இதுவன்றி நிலத்தில் இப்பயிரின் வேர்கள் கூடியமட்டும் ஆழமாய்ப் பிரவேசித்துப் பயிருணவை அருந்தி பயிரை வளரச்செய்து அதன் தழைகளிலும் கொப்புகளிலும் பயிருணவைச் சேர்க்கும். இப்படி திரட்டிய உணவானது பசுந்தாள் பயிரை நிலத்தில் உழுதவுடன் மறுபடியும் மண்ணில் சேர்ந்து வெகு எளிதில் பயிர்கள் அருந்தக்கூடிய விதமாய் பக்குவப்பட்டிருக்கும். ஆனால் நிலத்தை முன் கூட்டியே உழுது வைப்பதின் முக்கிய நோக்கம் அடுத்த காரில் புழுதியில் விதைப்பு நடத்துவதற்கு உபயோகப்படவேண்டுமென்பதுதான்.

விதைப்பு செய்யும் பயிருக்கு அதிகக் காய்ச்சல் அவசியமென்பது சாதாரணமாய் எல்லாருக்கும் தெரியும். நிலம் காய்ச்சல் கொள்ளும் காலத்தில் இடையிடையே அதிக மழை பெய்தால் அதிகப் பருவக்கேடு உண்டாகின்றது. விதைப்புப்பயிர் நன்றாய் வளர்ந்து சரியான மேனி கொடுக்கவேண்டுமானால் காய்ச்சல் கொள்ளும் காலத்தில் அதிக மழைகள் பெய்யக்கூடாது. விதைப்பு செய்யுங்காலத்தில் மேல்மண்ணும் அடிமண்ணும் நன்றாய்க் காய்ந்து உலர்ந்து உஷ்ணமாயிருக்கவேண்டும். விதைகள் முளைப்பதற்கான ஈரம்மட்டும் மேல் மண்ணில் உண்டாகும்படியான மிதமழைதான் பெய்யவேண்டும். விதைத்தவுடனாவது, பின்பு இருபதுநாள் வரைக்குமாவது மழை பெய்யக்கூடாது. அதுமட்டும் முளைத்தபயிர் வாடிக்கொண்டேயிருக்கவேண்டும். இப்படி இருந்தபின் மழைபெய்து நிலம் நன்றாய் நனைந்தாலும், தண்ணீர் பாய்ச்சினாலும் பயிருக்கு நல்லது. அதற்குமுன் மழை பெய்தால் பயிர் வெளுத்து நோய்கொண்டு மேனித் தாழ்வாகும்.

இவ்வருஷம் திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்

சாவூர், தென் ஆர்க்காடு, வடஆர்க்காடு, செங்கற்பட்டு, சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களில் பங்குனிமாதக் கடைசியிலும் சித்திரைமாதத்திலும் அளவுக்கு சற்று அதிகமான மழைகள்பெய்து நிலங்களில் ஈரமுண்டாகிக் காய்ச்சலைக்கெடுத்திருக்கின்றன. இதனால் மேல் மண்ணும் அடிமண்ணும் காயாமல் விதைப்புக்குவேண்டிய பருவம் சரியாய் வாய்க்காது. மேல்மண் வைகாசி மாதத்தின் வெயிலிலும் காற்றிலும் காய்ந்தாலும் காயலாம். ஆனால் அடிமண்ணில் ஈரம் தங்கியிருந்து விதைப்பைக் கெடுக்கும். இப்படி நிலங்களை உழுதுவைத்திருக்கும் கிருஷிகர் அப்போது நடுகைப்பருவம் செய்யவேண்டியதாகவே நேரிடும். ஏனென்றால் பருவக்கேட்டுடன் விதைப்பு நடத்துவதைவிட நடுகைசெய்வது எவ்வளவோ மேன்மையென்பது எல்லாருக்குந் தெரியும். ஆனால் நன்செய்ப்பயிர் செய்வதில் அநுபோகசாலிகள் கோடையில் உழுதுபோட்ட வயல்களில் தண்ணீர்பாய்ச்சி நடுகை செய்தால் அந்தப் பயிர் வெக்கரித்து வெந்தழிவு நேரிடும் என்று சொல்லுவார்கள். இப்படி சில சமயங்களில் சம்பவிப்பதை நாமும் அநுபோகத்தில் கண்டிருக்கிறோம்.

ஆகையால் நன்செய்நிலங்களை உழுது காயவிடுவது மழைபெய்யாமல்போனால் மட்டும் உபயோகமே தவிர, மழை பெய்யுமானால் உபயோகமில்லை. இதையறிந்துசிலர் தங்கள் நன்செய் நிலங்களை உழாமல் தரிசாய்ப்போட்டு வைப்பார்கள். அதில் மழைபெய்தாலும் பெய்யவில்லையானாலும் கால்களில் தண்ணீர்வந்தவுடன் சேறுக்கி நடுகை செய்யலாம். இப்படிச் செய்வதில் பயிருக்குக் கெடுதியுண்டாகாது.

ஆனால் பங்குனி சித்திரை மாதங்களில் பெய்யும் மழைப் பதமானது நன்செய் நிலங்களில் யாதொரு பிரயோஜனமு மில்லாமல் போகிறது. இப்படி மழைப்பதம் அவம்போகாமல் எப்படியாவது உபயோகிக்கக் கூடுமானால் அது நன்மையாயிருக்கும். இதற்காகச் சிலர் நன்செய் நிலங்களில் எள்பயிர் செய்திருக்கிறார்கள். இப்படி அநேக கிராமங்களில் எள்பயிரிடும் வழக்க மிருக்கிறது. சமயத்தில் மிதமான ஒன்று அல்லது இரண்டு மழைகள் மட்டும் பெய்யுமானால் எள்பயிர் நன்றாய் விளைவடையும். தொடர்ந்து பெருமழை பெய்யுமானால் எள்பயிர் அழுகிக்கெடும். பூத்திருக்கும் சமயத்தில் மழைகள் பெய்தால் பூக்கள் உதிர்ந்து கெடும். காய்த்தபின் பெருமழை பெய்தால் கிளைகள் அழுகி முறிந்து விழுந்துவிடுவதுமன்றி, வேர்கள் புளித்து அழுகிப்போம். இப்படி கெடுதியடையாமல் சரியாய் விளைந்தாலும்; இந்தப்பயிரால் நன்செய் நிலங்களுக்குண்டாகும் நஷ்டம் அளவிடக்கூடாதது. புன்செய் நிலங்களில் எள் பயிரிடுவதால் அவைகளின் வளம் அதிகமாகக் குறைவுபடுமானாலும், இரண்டு மூன்று வருஷங்களுக்கு அந்நிலங்களைத் தரிசு போட்டுவைப்பதினாலே, அவைகள் ஒருவாறு மறுபடியும் செழிப்படைகின்றன. இப்படி நன்செய் நிலங்களைத் தரிசுபோட்டுவைக்க முடியாது. எள் பயிர் சத்து

ள்ள பயிருணவை உண்டுவிடுவதால் நிலவளங் குன்றும். ஆகையால் அதிகமான எருவை அந்நிலங்களுக்குப் போடவேண்டியதாயிருக்கும். அப்படிச் செய்வதில் நஷ்டமேதவிர இலாபமில்லை; என்றாலும் நமது கிருஷிகர் தங்கள் நிலங்கள் ஓய்ந்திருக்கவேண்டிய காலங்களில் நிலவளத்தைஅதிகமாகக் குறைக்கக்கூடியபயிர்களைவிளைவிக்கிறார்கள். இதைப்போன்ற மதிகேடான செய்கை விவசாயத்தில் வேறொன்றுமில்லையெனச் சொல்லலாம். இனி நமது கிருஷிகர் தங்களுக்குக் கிடைக்கும் சுவல்ப இலாபத்தைக் கருதி நன்செய்களில் எள் பயிரிடுவதை நிறுத்திவிடுவார்களென நம்புகிறோம்.

இன்னும் சில கிருஷிகர் பங்குனி சித்திரை மாதங்களில் நன்செய்களில் வயல்பயறு என்று சொல்லும் பனிப்பயறு சாகுபடி செய்திருக்கிறார்கள். இதில் சரியானபடி விளைந்தாலும் ஒரு கோட்டை விறைப்பாட்டில் ஒரு கோட்டை பயறு விளையும். மழைபெய்யாமல் போனாலும், அதிகமழை பெய்தாலும், இந்த விளைவு குறைந்துபோகும். சிலசமயங்களில்பயிர் முழுவதும் அழுகியும், சிலசமயங்களில் முழுவதும் தீவடைந்தும்போக நாம் கண்டிருக்கிறோம். இவ்வருஷத்தில் நன்செய் நிலங்களில் பயிரிடப்பட்டிருந்த இப்பயிர் முழுவதும் அழுகிப்போயிற்று. பனியில் விளைவாகக் கூடியதால் இதற்குப் பனிப்பயறு என்று பேர். அப்படியிருக்கப் பெருமழையை அது தாங்குமா? மிதமான மழை பெய்து ஒருவேளை சரியாய் விளைவுக்கு வந்தாலும் கூட, நிலத்துக்கு ஓய்வுகாலம் இல்லாமல் போவதால் உண்டாகும் கெடுதி அந்த இலாபத்துக்கு எத்தனையோ மடங்கு அதிகமாகும்.

இவ்விதமாக எந்தப்பயிரை விதைத்து விளைவித்து மாசூல் எடுத்தாலும் அதினாலுண்டாகும் நன்மையைவிடக் கெடுதி அதிகமென்பது வெளியாகும். என்றாலும் மேலப்பாளையம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி, தச்சநல்லூர் முதலான அநேக கிராமங்களில் சலுப்பர் கிருஷிகருடைய நன்செய் நிலங்களை பங்குனி, சித்திரை வைகாசிமாதங்களில் குத்தகைக்கு ஏற்று, அவைகளில் சடம்புப்பயிரை நெருக்கமாய் விதைத்து வளர்ந்தவுடன் அறுத்து, இலைகளை நிலங்களிலுதிர்த்துத் தட்டையைக் கொண்டுபோய் நனைத்து நார் உரித்து இலாபம் சம்பாதிக்கிறார்கள். இப்படி மூன்று மாதங்களுக்கு அந்த நன்செய் நிலங்களை உபயோகிப்பதற்காகக் கிருஷிகருக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ 13 கொடுப்பார்கள். இந்தச் சடம்பு சாகுபடி செய்வதால் கொஞ்சம் பயிருணவு நஷ்டம் சம்பவித்தாலும், அந்தப்பயிரின் இலைகள் அதிகமாக நிலத்தில் உதிர்ந்து எருவாவதாலும், வேர்களில் ஒருவிதமான அணுக்கிருமிகளால் உரச்சத்துண்டாவதாலும், நிலங்களின் வளம் அதிகமாய்க் குறைவதில்லை. வருஷா வருஷம் சடம்பு சாகுபடியானாலுங் கூட அந்த நன்செய்களுக்கு அதிகமான எருப்போடாமலே சரியான விளைபலன் கொடுத்து வருகின்றனவென்பது

அனேகருடைய அனுபோகத்தில் தெரிந்திருக்கும். ஆகையால் சடம்புப்பயிர் சாகுபடியில் நிலங்கள் க்ஷீணமடைவதில்லை யென்று வெளியாகும்.

சனுப்பர் இப்பயிருக்காக நிலச்சுவான்களுக்கு எக்கர் ஒன்றுக்குக் கொடுக்கும் 13 ரூபாயை ஒரு பொருட்டா யெண்ணமல், நிலச்சுவான்களே அந்நிலங்களில் சடம்புப்பயிர் செய்தால், இரண்டு மாதக் காலத்தில் பூத்துக்காய்பிடிக்கும். அத்தருணத்தில் அந்தப்பயிரை வெட்டினால் எக்கர் ஒன்றுக்கு ஐந்தாறுவண்டி இலை தழை கிடைக்கும். கிருஷிகர் தற்காலத்தில் தொலை தூரங்களிலிருந்து தழை வெட்டி வண்டிகளி லேற்றிக்கொண்டுபோய் நன்செய் நிலங்களில் போடுகிறார்கள். ஒரு வண்டித்தழை சுமார் ரூ 6 விலை ஆகிறது. இப்படி வயல்களிலேயே தழைப்பயிர் உண்டாக்குவதால் ரூ 30 பெருமான தழை ஒரு எக்கர் நிலத்தில் உண்டாகும். அதற்குச் செல்லுஞ் செலவோ எக்கர் ஒன்றுக்கு ரூ 4 க்கு அதிகமாகாது.

உழவுக்கு	ரூ	1—0—0
விதைக்கிரயம்	ரூ	2—0—0
காவல் கூலி	ரூ	1—0—0

ஆக ரூ 4 செலவுபோக

இலாபம் ரூ 26—0—0 ஆகும்

இவ்விதமாகத் தழைப்பயிர் தற்காலம் ஏன் உண்டாக்குவதில்லையென்று கேட்கும்போது சிலர் சொல்லும் ஆக்ஷேபனை யென்னவென்றால் :—

(1) சடம்புப்பயிரை ஆடுமாடுகள் மேய்ந்து அழிவு செய்யும்;

(2) நிலம் ஓய்ந்து பயிருணவு பக்குவப்பட வேண்டிய சாவகாசம் கிடையாமல்போகிறது என்பதுதான். முதலாவது ஆக்ஷேபனை ஒப்பத்தக்கதில்லை. எப்படி யென்றால் பயறுவகைகள் பயிர் செய்யும்போது அநேக கிருஷிகர் ஒன்றுசேர்ந்து ஒருகூலியாளைக் காவலுக்கு நியமிக்கிறார்கள். அதேவிதமாகச் சனுப்பர் சடம்புப்பயிர் செய்யும்போதும், ஒரு பையனைக் காவல்போடுகிறார்கள். இப்படியிருக்க இந்தப் பயிருக்குமட்டும் மாட்டழிவு நேரிடும் என்னும் ஆக்ஷேபனை சரியானதல்ல. இரண்டாவது இப்பயிரால் நிலத்தில் பயிருணவு பக்குவமடைய வேண்டியதற்கு யாதொரு தடையுமுண்டாவதில்லை. பயிர் நிலத்தை மூடும்வரை வெயிலும் காற்றும் பட்டு மண்ணின் அணுக்கள் பக்குவமாகும். மேலும் இந்தப்பயிர் அருந்திய பயிருணவு முழுவதும் திரும்ப மண்ணிலேயே சேருகிறதல்லவா ? அதிலிருந்து யாதொரு மாகுலும் நாம் அறுத்தெடுப்பதில்லை. மேலும் தழைப்பயிர் சாகுபடியில் மண்ணில் நைட்ரோஜன் அணுக்கிருமிகள் ஏராளமாய் உண்டாகி நிலத்தில் அதிக வளமுண்டாக்குகிறது. நிலம் வெட்டையாய் ஓய்வடைந்திருந்தால் எவ்வளவு பிரயோஜன முண்டாகுமோ

அதைவிட அதிகமான பிரயோஜனம்சடம்பு முதலிய தழைப்பயிர்கள் சாகுபடி செய்யும்போது உண்டாவதாக விவசாய ரசாயன சாஸ்திர நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தத் தழைப்பயிர் சாகுபடி செய்வதால் அந்தக்காலத்தில் பெய்யும் மழை முழுவதும் உபயோகப் படுகிறது. மழை கொஞ்சமாகப் பெய்தாலும் சடம்புப்பயிருக்கு அநுகூலமாகும். மழைபெய்யாவிட்டாலும் மற்றப்பயிர்கள் கெட்டுத் தீவடைவதுபோல இந்தத் தழைப்பயிர் முழுவதும் கெடுவதில்லை; சுமாராய் வளர்ந்துகொஞ்சமாய்ப் பலன்கொடுக்கும். கனத்த மழைகள் தொடர்ந்துபெய்தாலும் அதற்குக் கெடுதியுண்டாவதில்லை, அதிக மழையால்அதிகச் செழிப்புண்டாகும். ஆகையால் இந்தத் தழைப்பயிர்ச்சாகுபடி எல்லாவகையிலும் அநுகூலமாகவேயிருக்கிறது. இதைக் கிருஷிகர் முக்கியமாய்க் கவனித்து வருவார்களென நம்புகிறோம்.

மேலும் நாளது வருஷத்தில் திருநெல்வேலி முதலான தென் ஜில்லாக்களில் கார்ப்பயிர் செய்யும்போது முன் கூட்டியே நாற்று விட்டு நடுகை செய்யவேண்டும். மழைகள் அதிகமாய்ப் பெய்த இடங்களிலெல்லாம், விதைப்புக்கு வேண்டிய காய்ச்சல் கெட்டுப் போய் விட்டபடியால் கிருஷிகர் விதைப்பு நடத்துவார்களானால் நஷ்டப்படுவார்கள்.

புன்செய் நிலத்தில் வாழைப்பயிர் சாகுபடி

PLANTAIN CULTIVATION ON DRY LAND

வியாபாரம், லேவாதேவி, கைத்தொழில் முதலியவைகளால் பணத்தை விர்த்திசெய்யவும், பாதுகாக்கவும், கூடுமென்ற தீர்மான மான நம்பிக்கை யில்லாததினாலே, பூமியை வாங்கிப் பயிர்செய்வது உத்தமமென்றும், அதிலும், ஆற்றுப்பாய்ச்சலுள்ள நன்செய் நிலத்தை வாங்கினால், பணம் அபிவிருத்தியடைய மார்க்கமில்லாதுபோனாலும் வருஷத்தில் இருபோகம் பயிராகுமென்றும், மாதம்ஒன்றுக்கு, ரூபாய் நூற்றுக்கு 4-அணு வட்டி கிடைத்தாலும் அதில் போட்ட பணத்திற்கு அழிவில்லையென்றும் நினைத்து, எமது முன்னோர் காலமுதல் எவ்வளவு அதிகவிலையாக விருந்தபோதிலும் அந்த நன்செய் நிலத்தையே வாங்கிப் பயிர்செய்தும், அத்துடன் வருஷத்தில் ஒருபோகம் பயிர் செய்யக்கூடிய மானுமாரிக் குளத்துப் பாசனமாகிய நன்செய் நிலமுள்ள ஏகபோக கிராமங்கள் சகாயமான விலைக்கு கிடைத்த போது வாங்கி மழைபெய்து குளத்தில் ஜலம் கட்டினபோது, ஜலத்தின் அளவிற்கு விளையக்கூடிய பயிர்களைச் செய்தும் வந்தோம்.

இந்தப் பழக்கம் நெடுங்காலமாக நடந்துவந்தது. செட்டில்மெண்டு டெப்டி கலெக்டர் ம-ா-ா-ஸ்ரீ, ரூவ் பகதூர் J. தர்மரங்க ராஜா அவர்கள் சென்ற 1905-ம் வருடத்தில் திருநெல்வேலி தாலூகா, தாசில்தாராக இருந்தபோது எமக்கு நேரில் வற்புறுத்திச் சொன்னதாவது "உங்களுக்குமுன் எத்தனேயோ தடவைகளில் விவசாயம் விர்த்தியடையும் விதத்தைச் சொல்லியும் நீங்கள் கவனிக்காம லிருக்கிறீர்கள். ஒரு குருணி (8-செண்டு) விரைப்பாடுள்ள நன்செய் நிலத்திற்கு 150, 200. ரூபாய் கொடுத்து வாங்கியும் மேலே சொல்லியபடி சொற்பமாயாவது தண்ணீர்த் தட்டில்லாமல் விளையும் என்ற நம்பிக்கை யில்லாதிருக்க, மென்மேலும் அதிலேயே முயற்சி செய்து நஷ்டமடைவது கொஞ்சமும் சரியல்ல. சொற்ப விலையுள்ள புன்செய் அல்லது புன்செய்க்கு ஒப்பான புனக்குளத்து நன்செய் ஆகிய இந்த நிலங்களில், கிணற்றுஜல ஆதரவைக்கொண்டு, பங்கு நெல், கரும்பு, வாழை இவைபோன்ற தக்க லாபந் தரும்படியான பயிர்களை நான் சொல்லிய நூதன முறைப்படி பயிர் செய்தால், நினைத்தபடி சரியான இலாபமும் திட்டமாய் விளைந்து கைகூடுமென்ற நம்பிக்கையும் உங்களுக்கு உண்டாகும். இந்த இலாபத்தையும் அதில் பயிரிடநேரிட்ட செலவையும், பயிரிடும் சமுசாரிகள் தெரிந்துகொள்வார்கள். அப்பொழுது நிரவாச நன்செய் கட்டுக் குத்தகைக்கு ஏற்றுக்கொண்டு நமது வீட்டு வாசலில் நெல்லைக்கொண்டு வந்து எப்படி அளக்கிறுர்களோ அதுபோலவே நமக்கு எவ்வித சிரமமும் இல்லாதபடி ரொக்கபணமாகவே நம்மிடம் கொண்டுவந்து கொடுத்துக்கொண் டிருப்பார்கள். எந்த வஸ்துவிற்கும் அதனுலுண்டாகும் பிரையோசனத்தினின்று விலையும், மதிப்பும் ஏற்படுவது சகஜம். அதுபோலவே சொற்ப விலையும் சொற்பத் தீர்வையுமுள்ள நமது புன்செய் நிலத்திற்கு விலையும், மதிப்பும் ஏற்படும் என்பதில் என்ன ஆட்சேபனே யிருக்கின்றது?" என்று போதித்தார்கள்.

அவைகளில் வாழைப் பயிரை ஏக்கர் ஒன்றிற்கு 4-அணு சர்க்கார் தீர்வையுள்ள வேப்பன்குளம் என்ற ஏகபோக கிருமத்தில் சென்ற 1083-ம் ஆண்டு தை மாதத்தில் கிணற்று ஜலயிரவை ஆதாரத்தைக் கொண்டு பயிர்செய்த அநுபவத்தை இங்கு விவரமாக எழுதியிருக்கிறேன்.

இந்தப் பாகங்களில் வாழைப்பயிரை ஆனி, ஆடி என்னும் பட்டங்களில்தான் பயிர்செய்வது வழக்கம். இந்தப் பட்டங்களில் பயிர்செய்தால்சித்திரை மாதத்தில் 9, 10, மாதப் பயிரானதால் பொதியும் குலே போடும் பருவமாகவு மிருக்கும். அப்போது உண்டாகும் சித்திரைச்சுளி என்ற காற்றிலும் ஆனி, ஆடி, மாதத்துக் காற்றிலும் அடிபட்டு அடியோடு வாழைகள் சாய்ந்து நஷ்டப்படுத்துவது முண்டு. இதனுல்தான் "வாழை வாழ வைத்தாலும்

வைக்கும் தாழவைத்தாலும் வைக்கும்'' என்ற பழமொழி ஏற்பட்டிருக்கிறது என்று அறிந்து தைப்பட்டத்தில் பயிர்செய்தேன்.

தரிசாய்க்கிடந்த சரல் கலந்த செவ்வல் புன்செயக் கொப்பாகிய புனக்குளத்து நன்செய் நிலத்தை; ம-ா-ா-ஸ்ரீ ருவ்பகதூர் J. தர்ம ரங்கராஜா அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட, 6-ரூபா விலையுள்ள இரும்புக்கலப்பைகொண்டு இரண்டுமுறை உழுது ஏக்கர் ஒன்றிற்கு 3000* ஆடுவைத்து, (காலடிக்கு 8) அதாவது இங்கிலீஷ் அடிக்கு 6-அடிக்கு 1-கண்ணக,(ஒருகனஅடி) அதாவது 1-அடி ஆழம் 1-அடி அகலம் 1-அடி நீளம், உள்ள 1000 குழிகள் வெட்டி அதில் மொந்தன்ஜாதி என்ற வாழைக்கன்றுகள் 1000 நட்டு மொங்கான் கட்டைகொண்டு அதன் தூர்களில் கெட்டித்து 5நாள்வரை ஜலம் விடாமலிருந்து,பாத்திகட்டி கீரைத்தண்டு, வெண்டை, சீனியவரை அல்லது கொத்தவரை என்ற பயிர் வித்துக்களை கலப்புப் பயிராக விதைத்து ஜலம் பாய்ச்சிவா 40-நாளைக்குள் கீரைத்தண்டு மாசூல் கைக்குவந்தது. அப்பொழுது வாழை 3-4இலைவிட்ட பருவமாகயிருந்தது. அப்பொழுது தரைக்கு மேல் 2-அங்குல அளவு விட்டு அருத்து நாட்டுக்கலப்பை கொண்டு உழுது மறுபடியும் 30-நாளான பின் உண்டாண வளர்ச்சியை 1-அங்குலம் விட்டறுத்து உழுதும் இப்படி5-மாசத்து பயிருக்குள்3-உழவு உழுது 5-நாளைக்கொருமுறை காச்சலும் பாச்சலுமாக ஜலமிரைத்து அப்பால் பலன் கைகூடும்வரை 5 முறை வெட்டிக் கொத்திக் கொடுத்தும் குலைபோடுமுன் அதன் தூரில் வெடிக்கும் கன்றுகளை வளர விடாமல் அறுத்தும் காய்ந்து உதிரும் சருகுகளை உடனைக்குடனே அப்புரப்படுத்தியும், புரட்டாசி மாதத்தில் முதல் மழை பெய்த உடனே அதன் தூர்களில் ஆவரங்குழையை அணைத்து மண்ணால்மூடி ஜலம் பாய்ச்சிப்பருவம் செய்துவந்தோம்.வாழை குலை போட ஆரம்பித்து சுமார் அரை இராத்தல் இடையுள்ள திரண்ட காய்களாகக் குலைஒன்றிற்கு 35-முதல் 60-காய்கள்வரை யீன்றன. வியாபாரிகள் வந்து பார்த்து காய்கள் நூற்றுக்கு அணு 13 ஆகஒப்பந்தம் செய்து வெட்டி எடுத்துக்கொண்டார்கள். குலைபோட்ட பின் வெடித்த கன்றுகளில் இரண்டானடிக்காக ஒரு கன்றில்மட்டும் இலை அறுக்காமல் விட்டுவிட்டு மற்றக் கன்றுகளி லிருந்து இலை மாசூலை எடுத்துக் கொண்டோம். இரண்டாமடிப் பலன் அடுத்தவருஷம் கைகூடும். இவ்விதப்பயிர் செய்ததனாலுண்டான லாபத்தையும், இதற்கு நேரிட்ட செலவையும் பயிரிடும் சமுசாரிகள் தெரிந்துகொண்டு நிலச்சுவானாகிய எமக்கு நிலத்திற்கும் உரத்திற்கும் பாதி வாரமாகவும் வாழைக்கன்றுக் கிரையம் முதலான எல்லாப் பருவத்திற்கும் அவர்களுக்கு பாதிவாரமாகவும் எம்மிடம் பேசி ஒப்பந்தம்செய்து பயிர் செய்திருக்கிறார்கள்.

* ஆடு வைத்தல் என்பது ஆடுகளை ஒரு இராத்திரிக்கு அந்த நிலத்தில் தங்கும்படி செய்தல்.

மேலே சொல்லியிருக்கிற வாழைப்பயிரைச் செய்த நிலத்தில் முன் நெல்பயிர்தான் செய்துவந்தோம். குளத்தில் ஜலம் தட்டாதிருந்து விளைந்தால் வாரத்திற்கு ஏற்றுப்பயிர் செய்த சமுசாரி வருஷத்தில் ஒருபோகம் பயிரிட்டு 5-கோட்டை அல்லது 560-பட்ணம் படி நெல் அளக்கிறதுண்டு. அதன்விலை இப்போது காலக்கிரையப்படி ரூ. 50 ஆயிற்று. குளத்தில் ஜலம் தட்டிப்போனாலோ பயிர்சுத்தத்தீவாகும்.

மேலே சொல்லியபடி பருவம்செய்து சரியான இலாபம் பெற்றதை சமுசாரிகள் தெரிந்து ஊக்கத்துடன் பயிரிட ஏற்றுக்கொண்டார்கள்.

இந்த திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள நிலச்சுவான்களும் நிலம் வைத்திருக்கும் விவசாய சபை மெம்பர்களும் ஷை வாழைப்பயிரையும் கரும்பு சாகுபடியையும் நேரில் வந்து பார்த்து சந்தோஷமடைந்தார்கள்.

இதுபோலவே இந்த திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பண்ணையார்கள், மிட்டாதார்கள், பெரிய நிலச்சுவான்கள், விவசாய சங்கத்து மெம்பர்கள் இதைப்போலொத்த நூதனப் பயிர்களை நூதனமாதிரிகளாக பயிர் செய்துதக்க லாபத்தை பெறுவார்களானால் அந்தந்த பக்கங்களிலுள்ள சமுசாரிகளும் அந்தமாதிரிகளை பின்பற்றுவார்கள். அப்பொழுது இந்த தேசமானது க்ஷேமத்தையடையும் என்ற எண்ணத்துடன் திருஷ்டாந்தமாகக் காட்டி இங்கு எழுதப்பட்டது.

வரவு

		ரூ.	அ.	பை.
(1)	காய் விற்று முதல் குலை 1-க்கு சராசரி 40-காயாக, குலை 1000-க்கு அல்லது 40,000-காய்க்கு ...	325	0	0
(2)	இலை மாசூல்	25	0	0
(3)	சீரைத்தண்டு, வெண்டை சீனியவரை மாசூல் ...	35	0	0
(4)	பக்கக்கண்கள் விற்ற கிரையம் 2,000-க்கு ...	20	0	0
	ஆகவரவு ...	405	0	0

செலவு

(1)	உழவு 5-க்கு	3	12	0
(2)	வெட்டு 1-க்கு ஆள் 20-க்கு சம்பளம் அணா 3 வீதம் வெட்டு 5 க்கு	18	12	0
(3)	3,000-ஆடு வைத்த கூலி	3	0	0
(4)	ஆவரங் குழை வண்டி 2-க்கு	12	0	0
(5)	மொங்கான் வைத்து கெட்டிக்க 100-க்கு அணா 3 வீதம்	1	14	0

(6)	மழை காலம் மீ 4 நீக்கி மீ 8-க்கு முறை 1-க்கு அணா 12-ஆகமுறை 48-க்கு தண்ணீர்பாய்ச்ச ...	36	0	0
(7)	* விதைக் கண்கள் 1,000-க்கு	10	0	0
(8)	கன்றுகள் கொண்டுபோக வண்டிவாடகை ...	3	0	0
(9)	கன்றுகள் போடகுழி வெட்டக் கூலி ...	3	12	0
(10)	உரம் வைத்து மண் அணைத்துப் பட்டம் திரட்ட	3	12	0
(11)	ஜலம் பாய்ச்சக் கூலி	6	0	0
(12)	கிணறு உள்பட நிலக்கிரயம் ரூ 200-க்கு மீ 1-க்கு ரூ 100-க்கு 1 வட்டி வீதம்	24	0	0
	ஆகச்செலவு ...	125	14	0
	ரூ 100-க்கு வட்டி ரூ 1 வீதம்செலவு நீக்கிக் கிடைத்த லாபம்	279	2	0

S. இராமலிங்கம் பிள்ளை,
சத்திரம் புதுக்குளம் கிராமம்,
திருநெல்வேலித் தாலுகா.

ஆரணி பொருள் காக்ஷி

ARNI EXHIBITION

நாளது எப்பிரல்மீ 3 தேதியன்று ஆரணி ஜாகீரைச் சேர்ந்த சத்யவிஜய நகரத்தில் நடந்த விவசாயப் பொருட்காக்ஷியில் கனம் மெஸ்தர் ஹாமிக்துரையவர்கள் தாம் கலெக்டராயிருக்கும்போது கிருமாந்திரங்களில் தங்கி அங்குள்ள குடிகளான கிருஷிகருடன் அடிக்கடி சம்பாஷித்து அவரவர்களுடைய குறைபாடுகளையும் க்ஷேமலாபங்களையும் நேரில் விசாரித்தறிந்து வந்ததில் தனக்கு அதிக திருப்திகரமாயிருந்ததாயும், இதைப்போன்ற காக்ஷிகளை அடிக்கடி நடத்துவதால் கிருமாந்திரக் குடிகளிலநேகர் ஒன்றுகூட நேரிடுமென்றும் அப்போது விவசாய விஷயங்களில் அவர்களுக்கு யோசனைசொல்லக்கூடியவர்களிடத்தில் பற்பலநூதன விஷயங்களையவர்கள் கேட்டுத் தாங்களொன்றுகூடி அவ்விஷயங்களைப்பற்றித் தற்கித்துப் பேசி அவற்றின் உபயோகத்தையடைய ஹேதுவாயிருக்குமென்றும், காக்ஷிசாலைக்கு வந்திருந்தவர்களில் அநேகர் அங்கே நூதன விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் வந்தவர்களாயிருக்கமாட்டார்களென்றும், வேடிக்கை பார்க்க எண்ணியே வந்திருக்கலாமென்றும், எப்படியிருந்தாலும் அவர்

* வாழைக் கன்றுகளின் விலை ஒவ்வொரு ஊரில் ஒவ்வொரு விதமாக இருக்கும்.

களெல்லாரும் ஒன்றுகூடுவதால் அவர்கள் காணும் காரியங்களைப்பற்றி ஒருவருடனொருவர் சம்பாஷிக்க நேரிடுமாதலால் அதனாலுண்டாகும் அநுகூலங்களைச் சிறிதேனும் அவர்கள் அடைவார்களென்றும் சொன்னார். மேலும் ஜாகீர்தாரைப்போன்ற நிலச்சுவான்கள் தங்கள் குடியானவர்களின் க்ஷேமத்தைக் கருதி பணச்செலவு செய்வது வெகுவாய் புகழத்தக்க காரியமென்றும், விவசாயவிர்த்தி சம்மந்தமாய் சர்க்காரில் வேண்டிய அநேக காரியங்கள் செய்துவந்துங்கூட, முழுவதும் சர்க்காரில் செய்துமுடிப்பது அசாத்தியமென்றும், அப்படிப்பட்ட காரியங்களை ஜமீன்தார்கள் முதலான பெரிய பணக்காரரும் நிலச்சுவான்களுமா யிருப்பவர்களே செய்யவேண்டிய தென்றும், இந்தக் கடமையை அவர்கள் உணர்ந்து ஏழைக் குடியானவர்களுக்கு ஹிதம்செய்ய அவர்கள் முயலுவார்களானால் தேசம் முன்னுக்கு வருமென்றும் சொன்னார்.

மாதத்திய பருவங்கள்

MONTH'S OPERATIONS

அநேக ஜில்லாக்களில் கிணற்றுப் புன்செய்களிலும், குறைந்த ஜலம் பெருகக்கூடிய மூன்றாந்தரம் நான்காந்தரத்தைச் சேர்ந்த ஆற்றுக்கால் வரத்துள்ள குளங்களின் ஆயக்கட்டிலும் சித்திரைச்சோளம் விதைப்பதற்கு இது தருணம். திருநெல்வேலி ஜில்லா சித்ரா நதிப்பாசன நன்செய்களிலும், அவை போன்ற மற்ற நிலங்களிலும் பருவம் தவராமல் இந்த சோளத்தை உடனே விதைக்கவேண்டும்

திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் அக்கினிச்சோளமும் அக்கினிக்கேப்பை (கேள்வரகு)யும் இப்போது விதைக்கலாம். “அக்னி நக்ஷத்திரம்” உண்டாகும் காலத்தில் சாகுபடி செய்வதால் அப்பயிர்களை அக்கினிக்கேப்பை அக்கினிச்சோளம் என்று சொல்வது.

திருநெல்வேலி முதலான தென்ஜில்லாக்களில் இப்போது கடுகு சாகுபடி செய்யத்தகுந்த காலம். கார் நெல்லும் தஞ்சாவூர் ஜில்லாமுதலானவிடங்களில் குருவை நெல்லும் நாற்றுவிடவேண்டிய சமயம் இதுவே. மேலும் பாங்குநெல்லைத் தகுந்த காய்ச்சல் பருவம் கெடாமலிருக்கு மிடங்களில் புழுதியில் விதைக்கத்தக்கது. பருவம்வாய்க்கவில்லையானால் தொளியாக்கி விதைக்கலாம். அல்லது நாற்றுவிட்டு அடுத்தமாதம் நடுகை செய்யலாம்.

ஆனிமாதத்தில் நடுகை செய்வதற்காக இப்போதே கேள்வரகை நாற்றுவிட்டு வைக்கவேண்டும், நடவேண்டிய நிலங்களை உழுது பருவப்படுத்தி வைக்கவேண்டும்.

இவ்வருஷம் துவரை சாகுபடி பட்டந்தவராமல் செய்யக்கூடிய அளவுக்குக் கோடை மழைகள் எல்லா விடங்களிலும் பெய்திருக்கின்றன. திருநெல்வேலி முதலான சில ஜில்லாக்களில் துவரை வைகாசிப்பட்டத்தில் கரிசல் நிலங்களில் விதைத்தால் செழிப்பாய் வளர்ந்து சரியானபடி பலன்கொடுக்கும். மணல்பாங்கான விடங்களிலும் செவ்வல் நிலங்களிலும், ஆனி

ஆடிமாதங்களில் அதிகமான மழைகள் பெய்வதாயிருந்தாலும், ஆடிப்பட்டம் துவரை சாகுபடிக்கு அதி சிலாக்கியமாயிருக்கும். சாதாரணமாக இரவைச் சோளத்துக் கிடையிடையே துவரைவிதையை நடுவது வழக்கம். இவ்வருஷம் அப்படி கலப்புப்பயிராய் துவரையை நடவேண்டியதில்லை. மானுவாரியாய்த் தனிப்பயிர் செய்யக்கூடிய அளவுக்கு மழை பெய்திருக்கிறது. ஆகையால் கரிசலில் உடனே துவரை விதைக்கலாம். செவ்வல் நிலங்களில் துவரை சாகுபடிக்கு நிலம் உழுது பருவப்படுத்தலாம்.

எல்லா ஜில்லாக்களிலும் சரியான மழை பெய்திருப்பதால் ஒரு பூ நிலங்களில் பசுந்தாள் எருவுக்கு ஏதாவது ஒரு பயிர் விதைக்கத்தகுந்த காலம் இது. "இதற்குத்தகுந்த மழைகள் பெய்யவில்லை; அதனால் தப்பிப்போயிற்று" என்று வீண் சாக்குப்போக்குச் சொல்ல இப்போது இடமில்லை.

கோயம்புத்தூர், திருச்சினாப்பள்ளி, திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களில் இந்த மாதத்தில் சேனைக்கிழங்கும் மஞ்சளும் நடுவார்கள். அடுத்த மாதத்திலும் இவைகளைப் பயிரிடலாம். அப்படிச் செய்யுமிடங்களில் நிலத்தை யுழுது, ஆடு வைத்துப் பருவஞ் செய்யத்தகும்.

கோயம்புத்தூர் திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களில் மிளகாய்ச்செடி நாற்றுவிட இது நல்ல சமயம். மிளகாய்ச்செடி பயிரிடும் நிலங்களை நன்றாய் உழுது ஆட்டுக்கிடைபோட்டு வைக்கவேண்டும். ஆடுபோடாத மிளகாய்ப்பயிர் உபயோகமில்லை.

நெல்நாற்று விடுவதில் குருணி(8 சென்டு) விரைப்பாட்டில் ஒருகோட்டைவிதையை விதைக்கும் வழக்கத்தைவிட்டு ஒருசெண்டு நிலத்தில் ஒருபக்காப்படி விதைவிட்டால் போதுமானது.

பாங்கு நெல்
BANKU PADDY

இந்தநெல்லை அநேக காலமாக வங்காளத்து மத்தியமாகாணங்களில் பயிராகி வருகிறது. இது பிசானம்நெல் தினுசுகளைப்போல பொடியாயும் அவைகளைவிட சற்று நீண்டும் இருக்கும். இதன் அரிசி வெள்ளையானது. மெல்லிதாயும் போஜனத்திற்கு ஏற்றதாயும் இருக்கும். பச்சரிசிக்கு குத்தும்போது அரிசி இடிந்து சற்றுஅதிகமான குருநொய்புண்டாகும், ஆனால் புழுக்கிச்குத்தினால் அரிசி அதிகமாய் இடிந்து உடைவதில்லை.

கார்ப்பருவத்தில்சாகுபடி செய்யும் நெல் தினுசுகளைப்போல,இந்தநெல் நாலு அல்லது நாலரைமாதத்தில்விளைவுக்குவரும்.ஆனால்அவ்வகையான நெல்லின் அரிசி சிவப்பாயும் பெரிதாயும் இருக்கும்.இந்தஅரிசியோமிகச் சிறந்தது.

இந்த பாங்குநெல்லை காரிலும் பிசானத்திலும் பயிரிடலாம். புழுதியிலும் தொளியிலும் விதைக்கலாம்.விதையை நனைத்தும் நனையாமலும் விதைக்கலாம். புழுதியிலும் தொளியிலும் நாற்றுவிடலாம். இவ்விரண்டுவிதமான பருவம் செய்தும் நடலாம். காரில்வைகாசி மாதத்திலும், பிசானத்தில் புரட்டாசி மாதத்திலும், விதைக்கலாம். நாற்றுவிடவும் செய்யலாம். எட்டு செண்டு நிலத்தில் ஆறுபக்காபடி விதை நாற்றுவிட்டால் அந்த நாற்று திடமாய் வளர்ந்து நன்றாய்ப்பலுகி இருக்கும். நாற்றுவிட்ட 28-நாளில் அதைப் பிடுங்கி எழங்குல இடைவிட்டு ஒவ்வொரு தனிமுதலாய் நட்டால் ஒருவக்கர் விஸ்தீரணம் நடக்கூடியதாயிருக்கும்.

பக்கத்தில் கிளைத்து மூடுகட்டுவதில் இந்த நெல்தினுசு அதிக சிலாக்ய மானது. இதன் வேர்கள் மற்றதினுசுகளைப்பார்க்கிலும் அதிகஆழமாய்இறங் கும். இதனாலேயே கடு வெயில்காலத்தில் மேல்மண் காய்ந்தாலும் வேர்கள் காய்ந்துபோகாமல் பயிர்கள் பச்சையாய் இருக்கும்.

கால்வாய்த்துக்குளங்களில் தண்ணீர்த்தட்டு நேரிட்ட காலங்களிலும், பொதுவாக மானாவாரிக்குளங்களின் ஆயக்கட்டிலும், இரவையினால் நெல் சாகுபடியாகும் இடங்களிலும், இந்ததினுசு சாகுபடிசெய்ய ஏற்றதாயிருக் கும். ஏனென்றால் இந்த நெல் விளைவடைவதற்கு அவசியமானதண்ணீர் மிகவும் கொஞ்சம். மற்றதினுசுகளுக்கு எப்போதும் இரண்டங்குலத்தண் ணீர் வயலில் கட்டிநிற்கவேண்டும். ஆனால் இந்தபாங்கு நெல் பயிருக்கு, கேள்வரகு பயிருக்குக் காய்ந்து காய்ந்து நாலு நாளைக்கு ஒருதரம் தண்ணீர் பாய்ச்சுவதுபோல, காய்ந்துகாய்ந்து தண்ணீர்நனைத்தால் போதுமானது. தண்ணீர் ஒருக்காலும் கட்டிநிற்கவேண்டியதில்லை. சென்ற புரட்டாசிமா தத்தில், திருநெல்வேலிஜில்லா, பாளையங்கோட்டைக்குத்தெற்கே ஒருமை யில்தூரத்திலிருக்கும் குலவணிகபுரம் என்னும்கிராமத்தில், ஏக்கர் ஒன்றுக்கு 4 அணா தீர்வை ஏற்பட்ட புன்செய் நிலத்தில் 12-செண்டு நிலத்தை நன்றாய் உழுது பதினைந்துவண்டி கால்வாய்கரம்பை அடித்து அதில் $1\frac{1}{2}$-படி பாங்கு நெல்லை புழுதியில் விதைத்து பக்கத்திலுள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் இரைத்து சாகுபடிசெய்தேன். ஐப்பசி மாதத்தில் தொடர்ந்து லேசான மழைகள் பெய்தன. கார்த்திகையிலும் மார்கழியிலும் கிணற்றுத்தண்ணீர் நாலு அல்லது ஐந்து நாளைக்கு ஒருமுறை இரைத்தேன் நிலம் காய்ந்தபின் கைக்கொட்டுகளால் கொத்தி இரண்டுதரம் களையெடுக்கப்பட்டது. அதன் பின் பயிர்வாட நிலம்காய்ந்து தண்ணீர் இரைக்கப்பட்டது. இவ்வித மாக அந்தப்பயிருக்கு சுமார் 17 தரம் தண்ணீர் இரைத்தார்கள். இந்த பன் னிரெண்டு செண்டு விஸ்தீரணத்திற்கும் நாட்டுக்கவலை ஒன்றால் இரண்டு மணிநேரத்தில் நீர் பாய்ச்சப்பட்டது. தை மாதத்தில் பயிர் அருவடை ஆயிற்று மாசூலின் அளவு 120 பக்கா நெல்லும், ஐந்துகட்டு வைக்கோலும். இந்தப்பயிருக்கு சென்றசெலவு

	ரூ.	அ.	பை.
இரண்டு உழவு	0	4	0
கரம்பை	2	8	0
எரு	0	8	0
வேப்பம்புண்ணாக்கு	0	10	0
விதை	0	3	0
விதைப்புக்கூலி	0	1	0
களைவெட்டு	1	0	0
இரவைகூலி	2	2	0
அருவடைச்செலவு...	0	4	0
ஆக மொத்தம் ...	7	8	0
மாசூல் கிரயம்	14	4	0
போகலாபம் பன்னிரெண்டு செண்டுக்கு ...	6	12	0

இதனால், எல்லாவகை நெல்பயிருக்கும் தண்ணீர் எப்போதும் கட்டி நிற்க வேண்டும் என்னும் அபிப்பிராயம் தப்பானதென்று நன்றாய் வெளி

யாகிறது. கேள்வரகுக்கு ஒப்பாக இந்த பாங்குநெல் பயிருக்கும் பருவம் செய்தால் போதுமானது. நாளது வருஷத்தில் ஆற்றுக்கால் பாய்ச்சலுள்ள நன்செய் நிலங்களில் பயிரிட்ட ஆனைக்கொம்பன் நெல் 12 செண்டுக்கு 80 பக்காநெல்தான் விளைவாயிருக்கிறது. அது அரைமேனி ஆகிறது. புன்செயில் விளைவித்த இந்த பாங்கு நெல்முக்கால்மேனி விளைவாயிருக்கிறது.

ஆகையால் இதை வாசிக்கும் கிருஷிகர் எல்லோரும் குறைந்த தண்ணீர் பெருகும் குளங்களினடியில் இந்த தினுசுநெல்லை கொஞ்சமாக தண்ணீர்பாய்ச்சி சாகுபடிசெய்து தக்கபலன் அடைவார்களென்று நம்புகிறேன்.

J. DHURMARANGA RAJU.

குறிப்புகள்

NEWS AND NOTES

திருநெல்வேலி ஜில்லாவில் அநேக கிராமங்களில் சால் விதைக் கருவி கொண்டு பருத்தி விதைத்திருப்பதின் அநுகூலங்கள் தெளிவாகத் தெரிகிறது. ஐப்பசி கார்த்திகை மாதங்களில் மழைகள் சரியாய்ப் பெய்யாத காரணத்தால் கையினால் விதைத்த அநேக விடங்களில் பருத்தி சரியாய் முளைக்காமல், ஒரு மாதத்துக்குப் பின் விழுந்த மழையில் முளைத்து தக்க காலத்தில் பலன் கொடுக்கவில்லை. சால்விதைக்கருவிகொண்டுவிதைத்ததிலோ எல்லாஇடங்களிலும் ஒரே நிதானமாய் முளைத்து மாசி பங்குனி மாதங்களில் காய் வெடித்தது. விதைக்கருவிகொண்டுவிதைத்தவிடங்களில்பருத்தி மாசூல் சேர்த்துக்கொண்டிருக்கும் சமயத்தில் கைவிதைப்புச்செய்த விடங்களில் பருத்திப்பயிர் வளர்ந்துகொண்டிருந்து பங்குனி மாதக் கடைசியிலும் சித்திரைமாதத்திலும்காய் பிடித்து வெடிக்க ஆரம்பித்தது. அப்போது கனமழைகள் பெய்ததினால் பருத்தி நனைந்து நிறங்கெட்டும் தரங்குறைந்தும் போனதன்றி, செடிகளிலுள்ள காய்கள் வெடிக்காமல் அழுகிப்போகவும் நேரிட்டது. பருத்திபயிர் பூத்துக் காய்க்கும் காலத்தில் நிலங் காய்ந்திருக்கவேண்டும். மழை பெய்து ஈரம் அதிகமுண்டானால் பூத்துக் காய்ப்பதற்குப் பதிலாக இலை யடர்ந்து மோதி செடி செழித்து மதத்து வளரும். இடியும் மின்னலுமிருந்தால் காய்த்த காய்களும் வெடிக்காதென்றும் சொல்லுவார்கள், கைவிதைப்புப் பயிரில் இப்படி எவ்வகையிலும் நஷ்டமுண்டாக, சால்விதைப்பிலோ, இப்போது பெய்த மழையால் இரண்டாவதுதரம் பருத்தி பூத்துக் காய்க்க ஆரம்பித்திருக்கிறது. இந்த விஷயத்தைக் கிருஷிகர் ஞாபகத்தில் வைத்து இவ்விதமாய்ச் செய்திருக்கும் பயிர்களையும் சுற்றிப்பார்த்து தாரதம்யம் கவனித்தார்களானால் அடுத்தவருஷம் முதற் கொண்டாவது, விதைக் கருவிகொண்டு பருத்தி விதைப்புச் செய்யத் தவரமாட்டார்கள்.

* * *

திருநெல்வேலி ஜில்லா ரெட்டியாபட்டிக் கிராமத்தின் உள்ளூர் புரைக்காரரிடமிருந்து விதை வாங்கி விதைத்தபயிரைவிட, விவசாய இலாகா உத்தியோகஸ்தரிடமிருந்து வாங்கின கருங்கண்ணி விதை விதைத்துண்டான பயிர் முன் கூட்டியே பூத்துக்காய்த்துப் பலன் கொடுத்ததாகத் தெரியவருகிறது. பின் பெய்த மழையினால் இந்தப்பயிரில் இரண்டாவது பலனும்கிடை

க்கும். இதுவிதை பொறுக்குவதனால் உண்டான அநுகூலம் என்றறிவினைக்க வேண்டியதாயிருக்கிறது. ஆகையால் கிருஷிகர் விதை பொருக்குவதை ஜாக்க்கிரதையுடன் செய்து வரவேண்டும். இதில் உபயோகமில்லையென்று எண்ணக்கூடாது

*
* *

மதுரையில் கழிந்த சித்திரை யுற்சவத்தில் கூடிய கால் நடைச்சந்தையில் வழக்கம்போல் அதிகமான கால்நடைகள் வரவில்லையாம் சுமார் 10,000 கால்நடைகள்தான் வந்திருந்ததாகவும், இதற்குக்காரணம் அனேக விடங்களில் பரவியிருக்கும் கால்நடை வியாதியென்றும், கால்நடைகளின் விலை அதிகப்பட்டிருந்ததாகவும் அறிகிறோம்.

*
* *

நமது இராஜதானியில் நல்ல கருங்கண்ணி விதையைக் குடிகளுக்கு விவசாய இலாகா உத்தியோகஸ்தர் சகாயவிலைக்கு விற்றுவருகிறார்கள். என்றாலும் அப்படி விளைவாகும் பருத்தி சரியான விலைக்கு விற்கப்படுவதற்குத் தக்க ஏற்பாடுகள் பம்பாயில் செய்யப்படுவதுபோல இங்கும் செய்யப்பட்டால் மிகவும் நன்றாயிருக்கும்.

*
* *

கோவில்பட்டி சர்க்கார் பண்ணையில் இப்போது பருத்திவிதையை விதைக்கலப்பைகொண்டு சால் சாலாய் விதைப்பதற்கு அநேக வேலையாட்களை பழக்கிக்கொண்டிருக்கிறார்கள். சால்விதைக்கலப்பையை உபயோகிக்க விரும்பும் எல்லாக் கிருஷிகரும் மிராசுதார்களும் தங்கள் வேலையாட்களை உடனே கோவில்பட்டி பண்ணைக்கனுப்பி பழக்கிக்கொள்ளலாம். அப்படி அனுப்பும் வேலையாட்களுக்குக் குடியிருக்க இடம் முதலான சௌகரியங்களை ஏற்படுத்திக் கொடுப்பார்கள்.

*
* *

கோயம்புத்தூர் கிருஷிக்கலாசாலையில் வாசிக்கும் முதல்வகுப்பு மாணாக்கருக்கு கோடைவிடுமுறை கழிந்து நாளது மேமீ 3-தேதியன்று மறுபடியும் கலாசாலை திரக்கப்பட்டது. இவ்விடுமுறைகாலத்தை அதிகப்படுத்தவேண்டுமென்ற கோரிக்கையை கவர்ண்மெண்டார் ஒப்புக்கொள்ளவில்லை. புதிதாய் இவ்வருஷம் இக்கலாசாலையில் சேரும் மாணாக்கர் அடுத்த ஜூன்மீ 7-தேதியன்று சேரவேண்டும்.

*
* *

கிணறுகளில் ஆழத்தில்அதிகத்தண்ணீர் அகப்படுமாவென்று சோதனை செய்வதற்காய் சர்க்காரில் நேமித்திருக்கும் உத்தியோகஸ்தர்கள் இப்போது கோயம்புத்தூர் ஜில்லாவில் வேலைசெய்துகொண் டிருக்கிறார்கள்.

*
* *

உடுமலைப்பேட்டை தாலூக்காவில் குமாரலிங்கம் என்னும் ஊரில் கொஞ்சங்கூட ஊற்றில்லாத ஒரு கிணற்றைச் சோதித்ததில் நல்ல ஊற்று கண்டதாகவும், கோயம்புத்தூருக்கு மூன்றுமைல் தூரத்திலுள்ள குனிய முத்தூரிலும் அவ்விதமாகவே உபயோகமான வேலை அவ்வுத்தியோகஸ்தர்கள் செய்துவருவதாகவும் அறிகிறோம். காங்கயம் டிவிஷனுக்குப் போகுமுன் விவசாயசங்கத்தாருடைய கிணறு சோதிக்கும் யந்திரத்தையும் கேட்டு வாங்கிக்கொண்டுபோய் வேலைசெய்ய உத்தேசித்திருப்பதாயும் தெரியவருகிறது. கோயம்புத்தூர் சர்க்கார்பண்ணையில்முன்சோதித்து பாதாள

ஊற்றுக்கண்டிருந்த ஒரு கிணற்றில் மறுபடியும் கம்பிபோட்டு அதிலும் ஆழமான பாதாள ஊற்று புதிதாய்க் கண்டு அதில் அதிகத் தண்ணீர் ஊறுவதாய்த் தெரியவருகிறது. தென் ஜில்லாக்களிலும் இவ்வேலை சீக்கிரத்தில் நடத்தப்படுமானல் எத்தனையோ ஆயிரம் ஏழைக்குடிகள் எளிதில் சுகப்பட ஏதுவாயிருக்கும்.

*
* *

இவ்வருஷத்தில் முக்கியமான உணவு தானியங்களின் விலை வாசி அதிகமாய்விட்டது. ரங்கூனிலிருந்து கப்பல்களில் ஏற்றி ஏராளமான நெல் வந்து இறக்குமதியாகவில்லையானல் நெல்விலைஇன்னும் அதிகமாயிருக்கும். கவர்ன்மென்டார் தங்களிடம் தற்காலம் பஞ்சப்படி பெற்றுவரும் வேலைக்காரருக்கு அடுத்த செப்டம்பர்மீ வரை பஞ்சப்படி கொடுத்துவர உத்தரவு செய்திருக்கிறார்கள்.

*
* *

பஞ்சாப்தேசத்தில் அதிக மழை பெய்து அருவடையைத் தாமதப்படுத்திபதாகவும், அதனல் விளைவு கொஞ்சம் சேதப்பட்டதாகவும், மற்ற இடங்களில் மழையால் நன்மையுண்டாயிற்றென்றும் தெரியவருகிறது

*
* *

சென்றவாரம் வட இந்தியாவிலும், வடமேற்கு மாகாணங்களிலும், மத்திய மாகாணங்களிலும், அளவுக்கு அதிகமான மழைகள் பெய்திருக்கின்றன.

*
* *

மைசூர் சமஸ்தானத்திலுள்ள கிருஷிகருக்கு வொக்காளீகர் என்று பேர். அவர்கள் எல்லாரும் சேர்ந்து வொக்காளீகச்சங்கம் என்று ஒரு பெரிய சபை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மைசூர் மகாராஜா அவர்கள் ரூபா 3,500 கொடுத்து சில நிலங்களை விலைக்கு வாங்கியும் சர்க்கார் நிலங்களையும் இந்த சபையாரின் கட்டிடங்களும் விவசாயப் பண்ணையும் ஸ்தாபிப்பதற்காக இனமாகக் கொடுத்திருக்கிறார்கள். இந்த சபையார் வொக்காளீகர் பத்திரிகை யென்ற ஒரு பத்திரிகை தங்கள் சொந்த அச்சுக்கூடத்தில் பிரசுறம் செய்து வருகிறார்கள். இந்த ஜன சமூகத்திலுள்ள பிள்ளைகள் வாசிப்பைப்பற்றியும் குடித்தும் வெறிகொள்ளுவதைத் தடுப்பதற்கும் கிருஷிகருக்கு முக்கியமான மற்ற விஷயங்களைப் பற்றியும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

*
* *

சென்ற எப்பிரல் மீ 1 தேதி முதல் 30 தேதி வரை சென்னையில் $7\frac{1}{2}$ அங்குல மழை பெய்திருக்கிறது. இந்த மாதத்தில் சராசரியாய் அரையங்குல மழைதான் சில வருஷங்களாகப் பெய்திருக்கிறது. கூடலூர், நாகபட்டணம், பாம்பன், கொடைக்கானல் கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி இந்தஇடங்களில் வழக்கமாய்ப் பெய்வதற்கு சற்று அதிகமாய்ப் பெய்திருக்கிறது. மதுரையில் வழக்கமாய் எப்பிரல்மாதத்தில் $2\frac{1}{4}$-பதம் பெய்வதுண்டு. இவ்வருஷம் எப்பிரல் மாதத்தில் $6\frac{3}{4}$-பதத்துக்குமேல் பெய்திருக்கிறது. கிணற்றிரவை செய்து அவஸ்தைப்படும் கிருஷிகருக்கு இதனல் கொஞ்சம் ஸ்ரமபரிஹாரமிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

'தென்னிந்திய விவசாயம்'

32 பக்கங்களுடன் மாதந்தோறும் வெளியாகிறது

வருஷ சந்தா தபால் உள்பட ... ரூ 3-0-0

		ரூ.	அ.	பை
விவசாய விளக்கம்	... ...	1	4	0
தென்னை	... ...	1	0	0
கரும்பு	... ...	1	0	0
நெல்	... ...	1	0	0

தபால் செலவு பிரத்தியேகம்.

ஜி. இராஜகோபால் பென்ஷன், விவசாய இன்ஸ்பெக்டர்,

தென்னிந்திய விவசாயம்,

வண்ணாரப்பேட்டை,

சென்னை.

TO=LET

இந்தியா, பர்மா, சிலோன் முழுமையும் பெயர்பெற்று யாவராலும் அங்கீகரிக்கப்பட்ட கம்பெனி,

காதர் அண்டு யூசப் பிரதர்ஸ்

கெடியார வர்த்தகர்கள் இந்தியா கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு கெடியாரம் சப்ளை செய்கிறவர்கள் நெ. 30. B. V. சென்னை. E.

நிக்கல் சில்வர் மேல் பார்வையில் மணிபார்க்கும்படியான கடியாரம் மேல் சாவி யுள்ளதுமான ஸ்கார்தமல்லாத (Non Magnetic) சர்தார் (Sirdar) லீவர் ரூபாய் 12, வெள்ளி 18.
Oxydised ரூ. 14.

நிக்கல் சில்வர் மேல் பார்வையில் மணிபார்க்கும்படியான கடியாரம் மேல் சாவி யுள்ளது ஸ்காந்தமல்லாத **(Non Magnetic)** **(Lever)** லீவர் ரூபாய் 8, வெள்ளி 14.

நெ.	101.	நிக்கல் மேல்பார்வை யுள்ளதும் மேல்சாவி யுள்ளதும் டயல்மேல் சிஃப்டம் லீவர் பேடண்டு மார்க்கு நடு அளவு	3	8	0
„	1.	நிக்கல் மேல்பார்வை யுள்ளதும், மேல்சாவி யுள்ளதுமான ரெயில்வே ரெகுலேட்டர் ரிஜிஸ்டர் கண்டயம் ஸ்டாம்பு	7	0	0
„	104.	வெள்ளி முழுமூடியுள்ளதும், மேல்சாவி அல்லது உள்சாவியுள்ளதும் சிறியது அல்லது நடு அளவுள்ளதுமான ஹண்டிங்க் கெடியாரம்	12	8	0
„	10.	வெள்ளி மேல்பார்வை யுள்ளதும் மேல்சாவி அல்லது உள்சாவி யுள்ளதும்,15-கெம்பு செதுக்கினதும் நடு அளவுள்ளதுமான பேடண்டு லீவர் கெடியாரம்	16	0	0
„	108.	வெள்ளி இரண்டு பக்கமும் மூடிபோட்டதும், மேல் சாவி அல்லது உள்சாவி யுள்ளதும் 15-கெம்பு செதுக்கினதுமான பேடண்டு லீவர் ½-ஹண்டிங் கெடியாரம் நடு அளவுள்ளது	20	0	0

N. B.—இன்னும் வெஸ்டு எண்டு ஜான்பாரல் முதலிய கம்பெனியாரால் செய்யப்பட்ட பலவிதமான கெடியாரங்களும், வெள்ளியிலும், பொன்னிலும் 150-ரூபாய் விலைவரையில் இக் கம்பெனியில் கிடைக்கும். கேட்லாக் தபால் சார்ச்சு இல்லாமல் அனுப்பப்படும். ஒவ்வொரு கெடியாரத்துடன் ஒருவெல்வெட் பெட்டி ஒரு கண்ணாடி, ஒரு மெயின் ஸ்பிரிங்கும், வில், காரண்டி பத்திரமும் கொடுக்கப்படும்.

Printed by G. C. Loganadham Bros, at the Guardian Press, Mount Road, Madras.